CBC 01101/13/0024/2526
தமிழ்நாட்டு விவசாயிகளின்
நலன் காக்க இந்திய அரசு உறுதிபூண்டுள்ளது
பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தின்கீழ் 47 லட்சத்திற்கும்
மேற்பட்ட விவசாயிகளுக்கு ₹12,700 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது
₹6,000 கோடிக்கும் அதிகமான விவசாய உள்கட்டமைப்பு நிதியின்
மூலம் சேமிப்புக் கிடங்கு வசதிகள் அதிகரிக்கப்பட்டு சந்தைகளுடனான
இணைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது
வளர்ச்சியடைந்த இந்தியா
வளர்ச்சிபெற்ற தமிழ்நாட்டால் வலுப்பெறும்
இதுவே மோடி அரசின் தாரகமந்திரம்
Government of India

தாம்பரம் முதல் கடற்கரை வரை சிறப்பு பேருந்துகள்

சென்னை, பிப். 26: எழும்பூர் ரயில் நிலைய மேம்பாட்டுப் பணி காரணமாக மின்சார ரயில் பயணிகள் சந்தித்து வரும் பிரச்னைகளைத் தீர்க்கும் வகையில் தாம்பரம் முதல் கடற்கரை நிலையம் வரை இயக்கப்படும் சிறப்பு கூடுதல் பேருந்துகளின் நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ரயில்வே துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து கடற்கரை நிலையம் வரை இயக்கப்படும் பேருந்துகள் நேரம்: காலை 6.30, 6.37, 6.44, 6.58, 7.05, 7.12, 7.26, 7.33, 74.40, 7.54, 8.01, 8.15, 8.22, 8.29, 8.43 ஆகிய நேரங்களில் 20 பேருந்துகள் இயக்கப்படும்.

தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து கிண்டி, தியாகராய நகர், எழும்பூர், சென்ட்ரல், பாரிமுனை வழியாக கடற்கரை வரை இயக்கப்படும் பேருந்துகள் நேரம்: காலை 6.51, 7.19, 7.47, 8.08, 8.36 ஆகிய நேரங்களில் இயக்கப்படும்.

கடற்கரை நிலையத்தில் இருந்து தலைமைச் செயலகம், தாம்பரம் நிலையம் வரை இயக்கப்படும் பேருந்துகள் நேரம்: மாலை 5, 5.07, 5.14, 5.28, 5.35, 5.42, 5.56, 6.03, 6.10, 6.24, 6.31, 6.45, 6.52, 6.59, இரவு 7.13 ஆகிய நேரங்களில் இயக்கப்படும். கடற்கரை நிலையத்தில் இருந்து பாரிமுனை, சென்ட்ரல், தாம்பரம் வரை இயக்கப்படும் பேருந்துகள் நேரம்: 5.21, 5.49, 6.17, 6.38 மற்றும் இரவு 7.06 ஆகிய நேரங்களில் பேருந்துகள் இயக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு ரயில்கள்: சென்னை கடற்கரை நிலையத்திலிருந்து தாம்பரம் வரை கூடுதலாக 20 சிறப்பு அதிவேக மின்சார ரயில்கள் வெள்ளிக்கிழமை (பிப்.27) முதல் இயக்கப்படும். காலை, மாலையில் இயக்கப்படும் இந்த ரயில்கள் மாம்பலம், கிண்டி மற்றும் சென்னை எழும்பூரில் மட்டுமே நின்று செல்லும் என சென்னை ரயில்வே கோட்டம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: தாம்பரம் வட்டாட்சியருக்கு அபராதம்

சென்னை, பிப். 26: நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தாம்பரம் வட்டார வளர்ச்சி அலுவலர், தாம்பரம் மற்றும் விருத்தாசலம் வட்டாட்சியர்களுக்கு தலா ரூ.2,000 அபராதம் விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தாம்பரம் வட்டத்தில் கோவிலஞ்சேரி கிராமத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை 3 மாதங்களில் அகற்ற சென்னை உயர்நீதிமன்றம் கடந்தாண்டு ஜூலை மாதம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை எனக்கூறி சதீஷ் என்பவர், சிஎம்டிஏ செயலர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், தாம்பரம் வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர் ஆகியோருக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றியதாக கூறப்பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், வழக்கில் இருந்து சிஎம்டிஏ செயலர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரை விடுவித்து உத்தரவிட்டனர்.

மேலும், மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் அரசு அதிகாரிகள் தங்களது கடமையைச் செய்ய தவறக்கூடாது எனக் கருத்து தெரிவித்தனர். பின்னர், தாம்பரம் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்கு தலா ரூ.2,000 அபராதம் விதித்து உத்தரவிட்டனர்.

தனியார் நிறுவனங்களின் பால் விலை லிட்டர் ரூ.6 வரை உயர்வு

சென்னை, பிப். 26: தமிழகத்தில் தனியார் பால் பாக்கெட் விலை லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.6 வரை உயர்ந்துள்ளது.

அதன்படி, ஒரு லிட்டர் ரூ.76-க்கு விற்பனை செய்யப்பட்ட கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ரூ.78-ஆகவும், ரூ.68-க்கு விற்பனை செய்யப்பட்ட தேநீர் சிறப்பு பால் (டீ ஸ்பெஷல் மில்க்) லிட்டர் ரூ.70-க்கும், ரூ.74-க்கு விற்கப்பட்ட சமன்படுத்தப்பட்ட 1 கிலோ தயிர் ரூ.76, இதுபோல, குறிப்பிட்ட ஒரு தனியார் நிறுவனத்தில் கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் லிட்டர் ரூ.72-இல் இருந்து ரூ.78-ஆகவும், தேநீர் சிறப்பு பால் ரூ.63-இல் இருந்து ரூ.69 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் சு.ஆ.பொன்னுசாமி கூறியதாவது: பால் உற்பத்தியை அதிகரிக்க தமிழ்நாடு அரசின் பால்வளத் துறை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், தனியார் நிறுவனங்கள் அதிக விலைக்கு உற்பத்தியாளர்களிடம் இருந்த பால் கொள்முதல் செய்கின்றன என்றார்.

மாநகராட்சியில் 'ஸ்மார்ட் பாதுகாப்பு சாதனம்'

சென்னை, பிப். 26: சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக 10 இடங்களில் பொருள் பாதுகாப்புப் பெட்டகம் அமைக்கப்படுகிறது.

முதல்கட்டமாக, விக்டோரியா பொது அரங்கம், மெரீனா கடற்கரை, முக்கிய பூங்காக்கள் என பொதுமக்கள் அதிகம் கூடும் 10 இடங்களில் சிறிய அளவிலான பொருள்கள் வைப்பு சாதனத்தை தனியார் நிறுவனத்துடன் இணைந்து அமைக்கப்படுகிறது.

பீரோ அமைப்பில் 16 அறைகள் உள்ளன. அதில் எண்ம முறையிலான பூட்டும் வசதி மற்றும் க்யூஆர் குறியீட்டில் கட்டணம் செலுத்துதல் உள்ளிட்ட வசதிகள் உள்ளன. அதில் பொருள்களை வைப்போர் தங்களது கைப்பேசிகள் மூலம் க்யூஆர் குறியீடு வாயிலாக கட்டணம் செலுத்துவது, பூட்டும் வசதி, திறக்கும் வசதியைப் பெறலாம். ஒரு மணி நேரத்துக்கு என கட்டணம் நிர்ணயிக்கப்படவுள்ளது. சோதனை முறையில் தொடங்கும் இந்த ஸ்மார்ட் பாதுகாப்பு பெட்டக சாதனம் நகரில் முக்கிய இடங்களிலும் அமைக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

194 புதிய மின்சார பேருந்துகள்: துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்

மத்திய மின்சாரப் பேருந்து பணிமனையில் சொகுசு பேருந்துகளின் இயக்கத்தை வியாழக்கிழமை தொடங்கி வைத்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் த.பிரபுசங்கர் (மாநகர்), இரா.மோகன் (அரசு விரைவு), இணை மேலாண் இயக்குநர் (மாநகர்) இராம.சுந்தரபாண்டியன் உள்ளிட்டோர்.

சென்னை, பிப். 26: சென்னை மத்திய பணிமனையில் இருந்து 194 புதிய மின்சார பேருந்துகளின் இயக்கத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பங்களிப்புடன், சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில், ரூ.697 கோடியில் 625 தாழ்தள மின்சாரப் பேருந்துகளை வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூந்தமல்லி, மத்திய பணிமனை, தண்டையார்பேட்டை-1 உள்ளிட்ட 5 பணிமனைகள் மூலம் இயக்க மாநகர் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்தது. அதன்படி முதல் 3 கட்டங்களாக கடந்த ஆண்டு 380 புதிய மின்சார பேருந்துகள் மக்கள் பயன்பாட்டுக்காக இயக்கி வைக்கப்பட்டன.

இந்த நிலையில், 4-ஆம் கட்டமாக ரூ.52.03 கோடியில் மேம்படுத்தப்பட்ட மத்திய மின்சாரப் பேருந்து பணிமனையில் இருந்து ரூ.248.25 கோடியில் 100 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள், 45 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்துக்கு ரூ.30.50 கோடியில் இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் கூடிய 49 அதிநவீன சொகுசு பேருந்துகள் மக்கள் பயன்பாட்டுக்காக வியாழக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டன.

மத்திய பணிமனையில் நடைபெற்ற இதன் தொடக்க நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை மக்களவை உறுப்பினர் தயாநிதிமாறன், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு, போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பிரபு சங்கர்(மாநகர்), இரா.மோகன் (விரைவு) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பேருந்துகளின் வழித்தடங்கள்:

1. திருவான்மியூர்-கிளாம்பாக்கம் பேருந்து முனையம் (தடம் எண்: 91) - 15 குளிர்சாதன பேருந்துகள்.
2. தீவுத்திடல்-கிளாம்பாக்கம் (தடம் எண்: 21ஜி)-20 குளிர்சாதன பேருந்துகள்.
3. ராயபுரம்-கிளாம்பாக்கம் (தடம் எண்:18ஏ)-15 குளிர்சாதனம்
4. சென்ட்ரல்-திருவான்மியூர் (தடம் எண்: ஏ1)-5 சொகுசு, 5 குளிர்சாதனம்
5. தீவுத்திடல்-கோவளம் (தடம் எண்: 109)-5 சொகுசு, 10 குளிர்சாதனம்
6. ராயபுரம்-பூந்தமல்லி (தடம் எண்: 54)-10 குளிர்சாதனம்
7. சென்ட்ரல்-அண்ணாசதுக்கம் (தடம் எண்: 27 பி)-5 சொகுசு, 5 குளிர்சாதனம்
8. தீவுத்திடல்-செங்குன்றம் (தடம் எண்: 242)-5 சொகுசு, 5 குளிர்சாதனம்
9. ராயபுரம்-தரமணி பேருந்து நிலையம் (தடம் எண்: 5 சி)-5 சொகுசு
10. ராயபுரம்-திருநின்றவூர் (தடம் எண்: 71 இ)-10 சொகுசு, 5 குளிர்சாதனம்
11. ராயபுரம்-ஆவடி (தடம் எண்: 120)-5 சொகுசு, 5 குளிர்சாதனம்
12. ராயபுரம்-தாம்பரம் மேற்கு (தடம் எண்: ஏ 51)-5 சொகுசு, 5 குளிர்சாதனம்.

அரசுப் பேருந்துகளில் பாடல்கள் ஒலிக்கத் தடை

சென்னை, பிப். 26: அரசுப் பேருந்துகளை இயக்கும்போது ஓட்டுநர், நடத்துநர்கள் பேருந்தில் டேப் ரிக்கார்டர், வானொலி உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தி பாடல்களை ஒலிக்கச் செய்யக் கூடாது எனவும், மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசுப் போக்குவரத்துக் கழகம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் அனைத்து கிளை மேலாளர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

பேருந்து ஓட்டுநர்கள், பேருந்துகளை இயக்கும்போது, டேப் ரிக்கார்டர்கள் மற்றும் வானொலிகளைப் பயன்படுத்தி பாடல்களை ஒலிபரப்புகின்றனர். இதன்மூலம் அதிக ஒலி எழுப்பப்படுவதாக பயணிகளிடையே தொடர்ந்து ஏராளமான புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, அரசுப் பேருந்து ஓட்டுநர்கள், பேருந்தை இயக்கும்போது வானொலி, டேப் ரிக்கார்டர் ஆகியவற்றைக் கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது.

பலமுறை அறிவுறுத்தியும், சில ஓட்டுநர், நடத்துநர்கள் இதைச் சரிவர கடைப்பிடிப்பதில்லை. இந்த எச்சரிக்கையை மீறி அவற்றைப் பயன்படுத்துவது தெரிவந்தால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஓட்டுநர், நடத்துநரின் செயல்பாடுகளை, அனைத்து கிளை மேலாளர்கள், பேருந்து நிலைய கண்காணிப்பாளர்கள், வழித்தட பரிசோதகர்கள் ஆகியோர் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் வார இறுதி நாள்களில் இசை நிகழ்ச்சிகள்

சென்னை, பிப். 26: கலைப் பண்பாட்டுத் துறை சார்பில் சனி, ஞாயிற்றுக்கிழமை (பிப். 28, மார்ச் 1) சென்னையில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதுகுறித்து அந்தத் துறை சார்பில் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சென்னையை இசை நகரமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இதை கொண்டாடும் வகையில், தமிழக கலைப் பண்பாட்டுத் துறை சார்பில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரீனா கடற்கரை, வள்ளுவர் கோட்டம் ஆகிய இடங்களில் சனி, ஞாயிற்றுக்கிழமை (பிப். 28, மார்ச் 1) மாலை 6 முதல் இரவு 9 மணி வரை இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இதில், முன்னணி இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள், தமிழிசைப் பாடல் நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை நடைபெறவுள்ளன.

நிகழ்ச்சிகளை சென்னை மெரீனா விவேகானந்தர் இல்லம் எதிர்புறம் அமைந்துள்ள கடற்கரை உள்சாலை மணற்பரப்பில் உள்ள திறந்தவெளி அரங்கில் வரும் பிப். 28-ஆம் தேதி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைக்கவுள்ளார். இந்த இசை நிகழ்ச்சிகளில் கட்டணமின்றி கலந்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

TMB Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life
உங்கள் ஊரில் TMB!
4 புதிய கிளைகள் திறப்பு!
எமது வளர்ச்சிப் பயணத்தில் நீங்களும் இணையுமாறு எங்களது
மேலாண்மை இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரி, இயக்குநர் குழு
மற்றும் பணியாளர்கள் உங்களை அன்புடன் அழைக்கிறோம்
27.02.2026 (வெள்ளிக்கிழமை)
புதிய பகுதிகளில் நம்பிக்கையான வங்கி சேவை
615வது கிளை மேலையூர், மயிலாடுதுறை
616வது கிளை பொன்னமராவதி, புதுக்கோட்டை
617வது கிளை சின்னசேலம், கள்ளக்குறிச்சி
618வது கிளை சோழவந்தான், மதுரை
456 டெபாசிட் திட்டம்
7.50% P.A
TMB bank
உங்கள் வருகையை பெருமையுடன் எதிர்நோக்குகிறோம்.
இன்று எங்களை அணுகுங்கள்!
www.tmb.bank.in | கட்டணமில்லா தொலைபேசி: 180 0425 0426
தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிமிடெட், பதிவு அலுவலகம்: 57, V.E. சாலை, தூத்துக்குடி, தமிழ்நாடு - 628 002.

Central Bank of India
सेन्ट्रल बैंक ऑफ इंडिया
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

சென்னை மெயின் கிளை
11, இரண்டாவது லைன் பீச், GPO பின்புறம்
சென்னை-600001 Ph: 044-2346 4270
E-mail ID: cmchen0876@centralbank.bank.in

திருத்தம்

26.02.2026 தேதியிட்ட இந்த நாளிதழில் வெளியான எங்களது **SARFAESI** சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு விளம்பரத்தை பார்க்கவும். **(A/c. 1.Mr.விஜயநந்தன், 2.Mrs.வள்ளியம்மாள் சுப்பையன்) அதில் டேவணித்தொகையை (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) ₹13,15,000/-** என திருத்தி வாசிக்கவும் மற்ற விவரங்களில் எந்தவித மாற்றமும் இல்லை.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி நீதிமன்றம்,
செங்கல்பட்டு முன்னிலையில்

H.M.G.O.P. No. 333 of 2025

திருமதி பூபதி,
கணவர் பெயர் காலம்சென்ற K. திருக்குறள் செல்வன், எண் 550,
வள்ளுவர் தெரு, துறையூர், டி ரங்கநாதபுரம் திருச்சிராப்பள்ளி - 621002. ... **மனுதாரர்**

மேற்கண்ட மனுதாரர் தன்னுடைய மைனர் குழந்தை கவின் T-ன் பெயரில் இருக்கும் சொத்தை விற்பனை செய்ய குழந்தையின் தாய் மற்றும் பாதுகாவலர் என்ற முறையிலும் இந்து சிறுபான்மையினர் மற்றும் பாதுகாவலர் சட்டத்தின் கீழ் தங்களுக்கு உண்டான மைனர் சொத்தை விற்பதற்காக அனுமதி கோரி மனு எண். 333/2025 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்கண்ட மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அம்மனு வருகின்ற **15-04-2026** அன்று விசாரணைக்கு வருகின்றது. இதில் எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருந்தால், நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்கண்ட நீதிமன்றத்தில் **15-04-2026 அன்று காலை 10.30 மணியளவில்** ஆஜராகி தெரிவிக்க வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில், மேற்படி மனு மனுதாரருக்கு சாதகமாக ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

S. அனுராதா பாலாஜி, மனுதாரரின் வழக்கறைஞர்
எண் 467, கூடுதல் சட்ட வளாகம்,
உயர் நீதி மன்ற கட்டடம், சென்னை - 600104.

இடம் : சென்னை
நாள் : 27-02-2026

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
இராணிப்பேட்டை மாவட்டம் - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
குறுகியகால மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண். A3/659/2026 நாள்: 26.02.2026
MGSMT - 2025-26- Additional Fund

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in/nicgep/app இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. இராணிப்பேட்டை மாவட்டம், 7 ஊராட்சி ஒன்றியத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்ள திட்ட இயக்குநர் அவர்களால் மின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறைமுறையில் வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதள முகவரியில் இலவசமாக 27.02.2026 முதல் 06.03.2026 பிற்பகல் 3.00 மணி வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
4. ஒப்பந்த நமூனாக்கள் பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்க வேண்டிய நாள் மற்றும் நேரம் குறுகியகால மின் ஒப்பந்தப்புள்ளி 06.03.2026 பிற்பகல் 3.00 மணி வரை ஆகும்.
5. மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் குறுகியகால மின் ஒப்பந்தப்புள்ளி 06.03.2026 பிற்பகல் 4.00 மணி.
6. இதர விவரங்கள் ஒப்பந்த நமூனாவில் தெரிந்துகொள்ளலாம்.

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
செ.ம.தொ.இ 1418/ஒப்பந்தப்புள்ளி/2026 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராணிப்பேட்டை.

पंजाब नैशनल बैंक ...भरोसे का प्रतीक !
பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

மண்டல அலுவலகம்: சென்னை, பொது நிர்வாகத் துறை,
PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014
மின்னஞ்சல்: zochngad2@pnb.bank.in, போன்: 044 28112294 / 283

ஒப்பந்தப் பணியமர்த்தல் அறிவிப்பு

சென்னை (அதாவது தமிழ்நாடு & கேரள மாநிலம்) மண்டல அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட வங்கியின் பல்வேறு அலுவலகங்கள்/கிளைகளில் **சூரிய மின் கூரை அமைப்பை வழங்குதல், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் அமைத்தல்** ஆகியவற்றுக்கான ஒப்பந்ததாரர்களின் எம்பேனல்மென்ட் விண்ணப்பங்களை பஞ்சாப் நேஷனல் வங்கி, சென்னை மண்டல அலுவலகம் வரவேற்கிறது.

தகுதி, விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவம் போன்ற விவரங்கள் வங்கியின் இணையதளமான **https://www.pnbindia.in/Tender.aspx** என்ற பகுதியிலிருந்து **27.02.2026 அன்று காலை 10:00 மணி முதல்** பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

குறிப்பிடப்பட்டபடி அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **"Asst. General Manager, General Administration Department, PNB டவர்ஸ், எண்.46-49, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014 என்ற முகவரியில் 13.03.2026 அன்று மாலை 5.00 மணி வரை** சமர்ப்பிக்கலாம்."

முறையே மேலே குறிப்பிட்ட பணிகளில் திருத்தங்கள் / விளக்கங்கள் ஏதேனும் இருப்பின் அவை மேற்குறிப்பிட்ட வங்கியின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும், எனவே, விண்ணப்பதாரர்கள் இணையதளத்தை மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக காணவும்

உதவி பொது மேலாளர்

கடன்மீட்புத் தீர்ப்பாயம் - III
6ஆம் தளம், கூடுதல் அலுவலக கட்டடம், சாஸ்திரி பவன்,
ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600006

TRC No.46/2022 **Dated: 25-02-2026**

மின் ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து **https://www.bankeauctions.com** என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைன் மின்ஏலத்தில் **28/01/2026** தேதிப்படி **ரூ. 6,59,85,546.68 (ரூபாய் ஆறு கோடி ஐம்பத்தொன்பது லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து ஐநூற்று நாற்பத்தாறு மற்றும் காசுகள் அறுபத்தெட்டு மட்டும்)** மேலும் வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள், திரு. **Y. ஜாஃபர் மற்றும் மற்றொருவர் OA** எண். **757/2015**ன்படி **பாங்க் ஆஃப் பரோடா,** ஆழ்வார்பேட்டை கிளையின் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு மின்ஏலத்தின் மூலம் விற்கப்படவுள்ளது.

சொத்து விவரம்: காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, பம்மல் கிராமம், பழைய ச.எண்.172/38, புதிய ச.எண். 172/60, 45 சென்ட் (19602) கொண்ட இச்சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் பம்மல் சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது. அதன் **எல்லைகள் : வடக்கு:** 172/1A1A, **தெற்கு :** 172 மற்றும் வண்டிப்பாதை, **கிழக்கு:** 172/3, 4, 6, 7 & 8, **மேற்கு :** ச.எண்.172/41.

Upset Price:	ரூ. 1,88,00,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தெட்டு லட்சம் மட்டும்)
மின் ஏல நாள் மற்றும் நேரம்	09.04.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை 3 நிமிட தானாக கால நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை
டேவணித்தொகை	Upset Priceல் 10 சதவீதம்
டேவணித்தொகை செலுத்துதல் மற்றும் மின் ஏல படிவத்தை சமர்ப்பிக்க கடைசி நாள்	07.04.2026 தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ through FT/NEFT/RTGS "The Recovery Officer, DRT-3, Chennai" to the credit of A/c. No.16330200000250, Indian Overseas Bank, Cathedral Branch, Chennai - 600 002. IFSC Code: IOBA0000109
ஏலத்தொகை அதிகரித்தல்	குறைந்தபட்சம் ரூ. 5,00,000/- அல்லது மடங்குகளில் ரூ. 5,00,000/-
சொத்தை பார்வையிடும் நாள்	26.03.2026 காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

எந்தவொரு சூழ்நிலையிலும் ஆவணங்களை நேரில் சமர்ப்பிக்க இயலாது. மேலும் இது சம்பந்தமான எந்தவொரு தகவல் பரிமாற்றமும் செய்ய இயலாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏலம் சம்பந்தமான இதர தகவல்கள், ஏல விண்ணப்பம், உறுதிமொழி மற்றும் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் **https://www.bankeauctions.com/** இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

சேவை வழங்குபவரின் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: **திரு. M. பிரபாகரன்** - 74182 81709

மேலும் விவரங்கள் அறிய **பாங்க் ஆஃப் பரோடா, ஆழ்வார்பேட்டை கிளை, எண். 10, CP ராமசாமி சாலை, முதல் தளம், ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018. (திரு. C. பாஸ்கரன் பாங்க் ஆஃப் பரோடா, முதன்மை மேலாளர், (செல் எண். 9106106652)** அவர்களை தொடர்பு கொள்ளலாம், மின்னஞ்சல்: sarche@bankofbaroda.co.in

(E. சசிகுமார்)
மீட்பு அலுவலர்

BAJAJ HOUSING FINANCE

பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: செரிபிரம் IT பார்க் B2 கட்டடம், 5ஆவது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா - 411014. கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., தரைத்தளம், Chateau D Ampa, எண் 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை- 600029. அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: Rathish.ramachandran@bajajhousing.co.in, அலைபேசி எண்: 9940155459 & 8778385461

பிற்சேர்க்கை IV-A [விதி 8(6)] அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின் - ஏல விற்பனை அறிவிப்பு - கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இதனுடன் தொடர்புள்ள கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 விதி 8(6)இன் ஷரத்துகளின்கீழ் இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடுபெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டதும் **பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்** (ஈடுபெற்றுக் கடனளித்தவர்) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது உள்ளது உள்ள இடத்தில்", **"உள்ளது உள்ளபடி", "உள்ளது என்னவோ அது", "மாற்று வழங்கப்பட மாட்டாது"** எனும் முறைகளில் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு விற்பனை செய்யப்பட உள்ளது. விவரங்கள் பின்வருமாறு.

கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் மற்றும் கடன் விவரங்கள்	1. மின்-ஏல நாளும் நேரமும் 2. டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள் 3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும்	1. குறைந்தபட்ச கேட்பு விலை 2. சொத்துக்கான டேவணித்தொகை [EMD] 3. ஏல உயர்வுத்தொகை
LAN: H403DHB0148038 & H403DHT0148040 & H403DHT0148041 1. K பாலகிருஷ்ணன் (காலமாகிவிட்டபடியால் சட்டப்பூர்வ வாரிசுகள் மூலம்) **(கடன்தாரர்),** முகவரி: கதவு எண் 1/1/487, சின்னப்பா நகர், மாரமங்கலத்துப்பட்டி கிராமம், சேலம் மேற்கு நகரம், சேலம் வட்டம், தமிழ்நாடு - 636030. முகவரி: A 263, 2ஆவது தளம், VGN டைனஸ்டி, வீனஸ் தெரு, மேல்பாக்கம், சென்னை, திருவள்ளூர் - 600077. **2. கணக்குமலையான் (காலஞ்சென்றவரின் அப்பா) (சட்டப்பூர்வ வாரிசு),** 1/1/487, சின்னப்பா நகர், மாரமங்கலத்துப்பட்டி, சேலம் , மோகன் நகர், தமிழ்நாடு - 636030. **3. பூங்காவனம் (காலஞ்சென்றவரின் அம்மா) (சட்டப்பூர்வ வாரிசு),** 1/1/487, சின்னப்பா நகர், மாரமங்கலத்துப்பட்டி, சேலம், மோகன் நகர், தமிழ்நாடு - 636030. **4. ஜெயச்சித்ரா (காலஞ்சென்றவரின் மனைவி) (சட்டப்பூர்வ வாரிசு),** 270, 2ஆவது தளம், VGN டைனஸ்டி, வீனஸ் தெரு, மேல்பாக்கம், சென்னை, திருவள்ளூர் - 600077. **5. தேவ் தியானேஷ் (காலஞ்சென்றவரின் மைனர் மகன்) (சட்டப்பூர்வ வாரிசு),** 270, 2ஆவது தளம், VGN டைனஸ்டி, வீனஸ் தெரு, மேல்பாக்கம், சென்னை, திருவள்ளூர் - 600077. **6. வேத விதாத் (காலஞ்சென்றவரின் மைனர் மகன்) (சட்டப்பூர்வ வாரிசு),** 270, 2ஆவது தளம், VGN டைனஸ்டி, வீனஸ் தெரு, மேல்பாக்கம், சென்னை, திருவள்ளூர் - 600077. **மொத்த நிலுவைத் தொகை: 24/02/2026 அன்றுள்ளபடி ரூ.17,59,757/-** (ரூபாய் பதினேழு லட்சத்து ஐம்பது ஒன்பதாயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு மட்டும்) இதனுடன் சேர்த்து 24/02/2026 முதல் கணக்கிடப்படும் எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள்	1) மின்-ஏல நாள்:- 31.03.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். 2) வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:- 30.03.2026 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரப்படி). 3) சொத்து ஆய்வு நாள்: 27.02.2026 முதல் 30.03.2026 வரை முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரம்)	1.அசையாச் சொத்துக்கான குறைந்தபட்ச கேட்பு விலை:- ரூ.27,00,000 /- (ரூபாய் இருபத்தேழு லட்சம் மட்டும்) 2.டேவணித்தொகை [EMD]:- ரூ.2,70,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்). 3 ஏல உயர்வுத்தொகை:- ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) & அதன் மடங்குகளில்.

அசையாச் சொத்து விவரம்: சொத்து அட்டவணை: அட்டவணை "A" அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 95492 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் அமைவிடம்: சர்வே எண்கள் 22/1B, 25/1A, 25/1B, 25/2 & 25/3. அமைவிடம் - மேல்பாக்கம் கிராமம், பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இது குன்றத்தூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** சர்வே எண்கள் 22/1A, 23, 24/3B1 & 24/3B2 ஆகியவற்றில் உள்ள நிலம், **தெற்கு:** சர்வே எண்கள் 26 & 27 ஆகியவற்றில் உள்ள நிலம், **கிழக்கு:** சர்வே எண்கள் 83/2A1, 83/2A2, 83/1B, 83/1A ஆகியவற்றில் உள்ள நிலம், **மேற்கு:** சர்வே எண் 22/2-இல் உள்ள நிலம் மற்றும் கண்ணபாளையம் கிராம எல்லைகள்.

அட்டவணை B: மேற்படி அட்டவணை "A"-இல் குறிப்பிட்டுள்ள நிலத்தில் அடங்கிய 244 சதுர அடி பிரிபடாப்பங்கு நிலத்தின் உரிமை, உடைமை, பாத்தியதை அட்டவணை "A"-இல் விவரிக்கப்பட்டுள்ள நிலத்தின் மீது கட்டப்பட்டுள்ள VGN டைனஸ்டி என்ற பெயரில் அறியப்பட்ட திட்டப்பணியின் இரண்டாவது தளத்தில் உள்ள ஃபிளாட் எண் A263, கட்டுமானப் பரப்பு 738 சதுர அடி மற்றும் அனைத்து பொதுப்பகுதிகள் உட்பட.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

● கடனீட்டுச் சொத்து குறைந்தபட்ச கேட்பு விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது. ● ஏல விற்பனையானது மின் ஏல வலைத்தளம் மூலம் இணையவழியில் நடத்தப்படும் ● இந்த மின்-ஏலம் https://bankauctions.in எனும் இணையத் தளத்தில் 31.03.2026 அன்று முற்பகல் 11:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணி வரை எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடக் காலநீட்டிப்புடன் நடத்தப்படும். ● நிறுவனத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அறிய பார்க்க வேண்டிய இணையத்தளம்: https://www.bajajhousingfinance.in/auction-notices அல்லது மேலும் விவரங்கள் பெற அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.

நாள்: 27.02.2026.
இடம்: சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர் (ரதீஷ் ராமச்சந்திரன்)
பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்